ஸ்ரீ:
விளம்பி ஹூ சித்திரை மீ
ஏப்ரல் - மே 2018
மலர் :1
இதழ் :1

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்



MONTHLY NEWSLETTER FROM :
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, Email : svdd@gmail.com, web: www.svdd.com

ஸ்ரீ:



விளம்பி ஹூ சித்திரை மீ
ஏப்ரல் - மே 2018

ஸ்ரீ:

மலர் :1
இதழ் :1

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள்

| | | | |
|---|---|---|---|
| காலை | 6.00 மணிக்கு | - | சந்நிதி திறப்பு |
| | 6.30 மணிக்கு | - | விஸ்வரூபம் |
| | 8.30 மணிக்கு | - | திருவாராதனம் |
| | 9.45 மணிக்கு | - | சாற்றுமுறை |
| | 12.00 மணிக்கு | - | உச்சிகாலம் |
| மாலை | 4.00 மணிக்கு | - | சந்நிதி திறப்பு |
| | 8.00 மணிக்கு | - | திருவாராதனம் |
| | 9.00 மணிக்கு | - | சயனம் |

## வியாழன், வெள்ளி, சனி

| | | | |
|---|---|---|---|
| காலை | 6.00 மணிக்கு | - | விஸ்வரூபம் |
| | 7.30 மணிக்கு | - | பொதுதரிசனம் |
| மாலை | 4.00 மணிக்கு | - | சந்நிதி திறப்பு |
| | 8.00 மணிக்கு | - | திருவாராதனம் |
| | 9.00 மணிக்கு | - | சயனம் |

**N. B.** விசேஷ காலங்களில் மாறுதல் உண்டு



ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004, போன் : 24953799
Website: WWW.svdd.com Email: svdd@gmail.com



ஸ்ரீ:

# ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

மயிலாப்பூர், சென்னை - 600004,
போன்: 24953799


## எலெக்டோரல் போர்டு மெம்பர்ஸ்

| | |
|---|---|
| 1. ஸ்ரீ V. வெங்கடேஷ் | தலைவர் |
| 2. ஸ்ரீ N. நரசிம்மன் | செயலாளர் |
| 3. ஸ்ரீ R. நாராயணன் | உறுப்பினர் |
| 4. ஸ்ரீ V. கௌஸ்துபத்ரன் | உறுப்பினர் |
| 5. ஸ்ரீ V. பாலாஜி | உறுப்பினர் |
| 6. ஸ்ரீ K. ஸ்ரீதரன் | உறுப்பினர் |
| 7. ஸ்ரீ N.S. ரங்கநாதன் | உறுப்பினர் |
| 8. ஸ்ரீ R. அனந்த பத்மநாபன் | உறுப்பினர் |
| 9. ஸ்ரீ R. முரளி கிருஷ்ணன் | உறுப்பினர் |
| 10. ஸ்ரீ G. பத்ரிநாராயணன் | உறுப்பினர் |
| 11. ஸ்ரீ R. ராமன் | உறுப்பினர் |

## தர்மகர்த்தாக்கள் :

1. ஸ்ரீ R. முகுந்தன்
2. ஸ்ரீ P. சேஷாத்ரி
3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்


Printed By:
Abisan Enterprises
Chennai - 87, Cell : 95000 45604

Designed:
yeSKay

॥ श्रीः ॥





HH 46th Jeer

From
**SRI KARYAM**
**SRI AHOBILA MATH**
**ஸ்ரீ அஹோபில மடம்**

॥ श्रीमते श्रीलक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः ॥
श्रीमत श्रीवण्शठकोप श्रीरङ्गनाथ यतीन्द्र महादेशिकाय नमः ॥

அகிலாண்டகோடி ப்ரஹ்மாண்ட நாயகனான ஸ்ரீமந்நாராயணன் அகலகில்லேன் என்றுரையும் அலர்மேல்மங்கையுடன் தர்ஶன சூடாமணியாம் ஆசார்யஸார்வபௌமனான ஸ்வாமி ஸ்ரீதேஶிகனோடு மாமயிலை பதியதனில் நித்யவாஸம் செய்து அனைவருக்கும் அநுக்ரஹித்துக்கொண்டு எழுந்தருளியிருப்பது அனைவரும் அறிந்ததே. ஸ்வாமிஸ்ரீதேஶிகன் தாம் எப்படி ஸ்ரீபாஷ்யகாரரின் ஸ்ரீஸூக்திகளில் ஈடுபட்டு அநுஷ்டித்தாரோ அப்படியே ஸ்ரீதேஶிக அநுயாயிகளான நாமும் ஸ்வாமிஸ்ரீதேஶிகனுடைய வழியை க்கடைபிடித்து ஸம்ப்ரதாய ப்ரவர்தனம் செய்வது அவஶ்யமாகிறது. இத்தைக்கருத்தில் கொண்டு மயிலை ஸ்ரீவேதாந்ததேஶிக தேவஸ்தானத்தினர் ப்ரதிமாதம் **"ஸ்ரீதேஶிகஸந்தேஶம்"** என்னும் தமிழ் மாதச்செய்தி ஏடு ஒன்றை வரும் விளம்பிவருடம்முதல் வெளிக்கொண்டு வருவது கேட்டு ஸ்ரீமதழகியசிங்கர் திருவுள்ளம் மிக உகந்தாயிற்று. இதை அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களும் வாசித்து பயன் பெறவேண்டுமாயும், தேவஸ்தானத்தினரின் இது போன்ற கைங்கர்யங்கள் மேலும் மேலும் வளர்ந்து பலஶ்ரேயஸ்ஸுகளை அடையவேண்டுமாயும் ஸ்ரீமாலோலனை ப்ரார்திித்து அநுக்ரஹித்தாயிற்று.

இந்தப்படிக்கு ஸ்ரீநியமனம்

பருத்திப்பட்டு வங்கீபுரம் தேவனார்விளாகம்

ஸ்ரீஸந்நிதி ஸ்ரீகார்யம்

முகாம் : சேலையூர் ( கி.தாம்பரம் )
நாள் : ஹேவிளம்பி பங்குனி 29 வியாழன் ( 12.04.2018 )

**Central Office:** 'Sri Desika Bhavanam', 30, Venkatesa Agraharam, Mylapore, Chennai - 600 004. Tel: 044-2461 1540

Sri

Srimathe Rangaramanuja Mahadesikaya Namaha
Srimathe Srinivasa Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Vedantha Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Mahadesikaya Namaha

Srimathe Srinivasa Mahadesikaya Namaha
Srimathe Nigamantha Mahadesikaya Namaha
Srimathe Bhagawathe Bashyakaraya Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Divyamani Padukabyam Namaha

---

**SRIRANGAM**
**SRIMAD ANDAVAN ASHRAMAM**

31, (Old No. 21) Sir Desikachari Road,
Chennai : 91 - 44 - 2499 3658 / 42106776
CAMP. MELUR RD. SRIRANGAM. TRICHY - 6.

ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் காம்பில் ஸ்ரீமுகம்

சென்னை, மயிலை. ஸ்ரீவேதாந்த தேசிகர் தேவஸ்தானம் மற்றும் அதைச் சார்ந்த அனைத்து ஸபையினர், பக்தர்களுக்கு ஸ்ரீமதாண்டவன் ஆச்ரம ஸ்ரீகார்யம் ஸ்ரீராகவ தாஸனது மங்களாசாஸனங்கள்.

தேவஸ்தான சார்பில் "ஸ்ரீ தேசிக ஸந்தேசம்" எனும் மாதச் செய்தி இதழ் ஸந்நிதி உத்ஸவங்கள் மற்றும் ஸம்ப்ரதாய விஷயங்களுடன் வெளியிட உத்தேசித்திருப்பது அஸ்மதாசார்யன் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீமத்பரம-ஹம்ஸேத்யாதி. ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகன் ஈறான ஆசார்யர்கள் அனைவரும் திருவுள்ளம் உகக்கும் செயல் ஆகும். "ஸ்வாமி தேசிகன் -750"-இல் இக்கைங்கர்யம் சேர்ந்தது ஸம்ப்ரதாயத்தோர் அனைவர்க்கும் பெருமை. இக்கைங்கர்யம் வழுவிலா அடிமையாகவும், ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் தேவஸ்தானம் மேன்மேலும் பொலிவு பல பெற்று, திருமயிலை பாகவத பக்தர் பக்தி மணம் பரப்பவும் பல்லாண்டு பாடிப் பிறவிப் பயன் பெறுகிறேன்.

தாஸன்,
உறையூர் ஸ்ரீராகவாசார்யன்.
ஸ்ரீகார்யம்,
ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்.

ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்[3]ரி ஸமம் ஸ்தா[2]நம் ப்[3]ரஹ்மாண்டே[3] நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே[3]வோ ந பூ[4]தோ ந ப[4]விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

அன்பர்கள் தன்னை அறிய/அணுக, எம்பெருமான் வேங்கடவனாக ஆங்காங்கே வீற்றிருப்பன்; அவ்வித திருப்பதிகளில், தமிழ்த் தலைவனாம் 'பேயர்' அவதரித்த மாமயிலைப் பதியில், தூப்புல் குலவிளக்காம் ஸ்ரீ வேதாந்த தேஶிகன் இருமுப்பொழுது ஏத்தும் வகையில் கோயில் கொண்டிருப்பது, நம் நல்வினைப் பயனே! திவ்யதேஶங்கள், ஆழ்வார்களால் பாடப்பெற்றவை என்றால், ஸம்ப்ரதாயத்து ஆசார்யர் களால் பலகாலும் மங்களாஶாஸநம் செய்யப்பெறும் பேறுபெற்றது, இம்மயிலை திருக்கோயில்.

இத்திருக்கோயில், 'அநுதி[3]நம் ஸம்வர்த்த[4]ய' என்ற முதுமொழிக் கேற்ப நாள்தோறும் புதுப் பொலிவுடன் விளங்கிவருவதற்குக் காரணம் அன்பர்களின் ஆதரவுதான் என்பது அடியோங்கள் உணர்வு. அன்னாருக்கு திருக்கோயில் தொடர்பான செய்திகளை, 'தேஶிக ஸந்தேஶம்' [message by/ from/ on/ about Desika] ஒரு மாத இதழ் வழியாகத் தெரிவிக்கவேணும் என, எம்பெருமான் திருவுள்ளம் பற்றியிருக்கிறான். கருவிகளான அடியோங்கள், தேஶிகனின் தாள்பற்றி இம்முயற்சியில் அடி வைக்கிறோம். இன்றைய சமயாசிரியர்களின் ஆசியுடன் இம்மாத மலரை வெளியிட முயல்கிறோம். உங்கள் ஆதரவை வேண்டி விழைகின்றோம்.

இம்மலர், நாளது ஸ்ரீ விளம்பி வருஷம் சித்திரைத் திங்கள் தொடங்கி, ஒவ்வொரு தமிழ் மாதம் முதலிலும் வெளிவரவிருக்கிறது. ப்ரதிகளுக்கு, அன்பர்கள் தேவஸ்தாந அலுவலகத்தை அணுகலாம். உங்களது மேலான கருத்துக்கள், இப்பணியைச் செம்மைப்படுத்த உதவும் எனக் கருதும்....

அறங்காவலர் குழு,
ஸ்ரீ வேதாந்த தேஶிகர் தேவஸ்தாநம்

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஸுமதி : பாட்டீ ! இப்போ என்ன நடந்த்ருண்ட்ருக்கு ...

பங்கஜம் பாட்டி : தேஶிகனோட 750-வது வருஷம் நடந்த்ருண்ட்ருக்கு.

ஸுமதி : இப்போ என்ன நடந்த்ருண்ட்ருக்கு, சொல்லுங்கோ ...

பங்கஜம் பாட்டி : உம்ம்....ம். தேஶிகனோட 750-வது வருஷந்தான் நடந்த்ருண்ட்ருக்கு!

ஸுமதி : ஸரி பாட்டி ...இந்த தேஶிகன் யாரு; உம்மாச்சியா ?

பங்கஜம் பாட்டி : அப்டியும் வெச்சுக்கலாம். தேஶிகன்-னா ‘உபதேஶம் பண்ட்றவர் - ஆசார்யன்-னு அர்த்தம்.

ஸுமதி : அப்போ, அது அவர் பண்ட்ற தொழிலோட பேரா ! அவர்க்குன்னு பேர் கெடயாதா !!

பங்கஜம் பாட்டி : இருக்கே; அவரப்பெத்தவா வெச்ச பேரு, வேங்கடநாதன்-னு. பின்ன ஏன் தேஶிகன்-னு சொல்றா-ன்னு கேக்கறயா .. மரியாதப்பட்டவாள பேர்சொல்லிக் கூப்படாம, அவா என்ன பண்ட்றாளோ அதச்சொல்லி குறிப்பிட்றது தான் வழக்கம் ...

ஸுமதி : ஆமாம் பாட்டி ! திருப்பாணாழ்வாரப் பத்தி சொல்லச்சே, தாத்தா சொல்லிற்கா... எப்பவும் பெருமாளயே பாட்றத்தால அவர, பாணன்-னே ங்பாட்றவர்சி சொல்றோம்-னு.

பங்கஜம் பாட்டி : சமுத்து ... நன்னா ஞாபகம் வெச்சுண்ட்றுக்கயே !

ஸுமதி : பாட்டி ! தேஶிகன் பொறந்து-வளந்ததப் பத்தி ....

பங்கஜம் பாட்டி : சொல்றேன் ... காஞ்சீபுரத்த ஒட்டி ‘தூப்புல்’-னு ஒரு இடம் இருக்கு. அங்க சுமார் 750 வருஷத்துக்கு முன்னே, யாக-யஜ்ஞங்கள்ளாம் பண்ணிண்ட்ருந்த புண்டரீகாக்ஷர்-னு ஒரு பெரியவர் இருந்தார். இவருக்கு அனந்தஸூரி-தோதாரம்பா-ன்னு பிள்ளையும் - நாட்டுப்பெண்ணும் உண்டு. இவாளுக்கு ரொம்பநாளா கொழந்தையே இல்ல. ஒரு ஸமயம் இவா, திருப்பதி மலைலே பெருமாள ஸேவிச்சுட்டு அங்க ராத்ரி தூங்கச்சே, அவருக்கு பெருமாள் தன் மணிய கொடுக்கற மாதிரிகனவு கண்டார். தோதாரம்பாக்கும் பெருமாளோட மணி-ய தான் விழுங்றாமாதிரிகனவு வந்தது . ஆச்சர்யமான இந்த ஸ்வப்நத்த, அனந்தஸூரி கிட்ட சொல்ல, ரெண்டுபேரும் ‘இது பெருமாளோட அநுக்ரஹம்தான்-னு’ நெனச்சு ஸந்தோஷப்பட்டா. அன்னிக்கே அவ கர்ப்பமானா. ஊருக்கு திரும்பிவந்த அவாளுக்கு பன்னெண்டு வருஷம் ஆனவுடனே ஒரு புரட்டாசி-திருவோணத்தன்று ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

ஸுமதி : என்ன அதிஶயம் பாட்டி! கொழந்த பொறக்ற துக்கு பன்னெண்டு வருஷமா ஆகும் ?

பங்கஜம் பாட்டி : பராஶர மஹர்ஷி பன்னெண்டு வருஷம் கர்ப்பத்ல இருந்ததா புராணம் சொல்றதோல்யோ. இந்த கொழந்தை யும் அதுமாதிரியே பொறந்ததிலேர்ந்து, இது பெருமாளோட அம்ஶமோ; இல்லாட்டா அநுக்ரஹமோ-ன்னு ஊஹிக்கலாம்.

ஸுமதி : திருப்பதி-ல பெருமாளுக்கு தீர்த்தவாரி/ அவதார உத்ஸவங்கூட இதே நாள்ளதானே, பாட்டி !

பங்கஜம் பாட்டி : ஸரியா சொன்னே; அப்பா-அம்மா அந்த கொழந்தைக்கு ‘வேங்கடேஶன்’னு பேர் வெச்சா.

தொடரும்....

# விளம்பி வருட சித்திரை மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்சவம் | உபயதாரர்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| ஏப்ரல்/ மே | சித்திரை | | | | | |
| 14.04.18 | 1 | சதுர்த்தசி | சனி | உத்திரட்டாதி | விளம்பி – தமிழ் வருஷப்பிறப்பு – சித்திரை விஷு புண்யகாலம் பெருமாள், | P.D.R. டிரஸ்ட் |
| | | | | | தாயார் மூலவர்,உத்சவர், தேசிகன், ஸ்ரீ பாஷ்யகாரர் – உத்சவர் திருமஞ்சனம் | |
| | | | | | காலை பாஷ்யகாரர் உத்சவம் 3 ஆம் நாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ.V.R. ராஜகோபால ஐயங்கார் பாமிலி |
| | | | | | மாலை பொழுதுடன் ஆராதனம் பெருமாள் வீதிபுறப்பாடு | |
| 15.04.18 | 2 | அமாவசை | ஞாயிறு | ரேவதி | காலை பாஷ்யகாரர் உத்சவம் 4 ஆம் நாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ.தள்ளம் S.ரகுநாதாச்சார் |
| 16.04.18 | 3 | பிச்ச அமாவசை / ப்ரதமை | திங்கள் | அஸ்வினி | வசந்த உத்சவம் (1) பெருமாள், தாயார், பாஷ்யகாரர், தேசிகன் உத்சவர் திருமஞ்சனம் | திருக்கண்ணமங்கை ஸ்ரீ.தேவநாதாச்சர், (2) ஸ்ரீ.R.நாராயணன், (3) ஸ்ரீ.K.சுதர்சனம் |
| | | | | | காலை பாஷ்யகாரர் 5 ஆம் நாள் உத்சவம் புறப்பாடு, மாலை பெருமாள், தாயார், | ஸ்ரீ.T.R. தேவநாதாச்சர் |
| | | | | | பாஷ்யகாரர், தேசிகன் ஆஸ்தானம் | |
| 17.04.18 | 4 | த்வ்தீயை | செவ்வாய் | பரணி | வசந்த உத்சவம் (2) பெருமாள், தாயார், பாஷ்யகாரர், தேசிகன் உத்சவர் திருமஞ்சனம் | ஸ்ரீ.R.நாராயணன் |
| | | | | | காலை பாஷ்யகாரர் 6 ஆம் நாள் உத்சவம் புறப்பாடு, மாலை பெருமாள், தாயார், | ஸ்ரீ.வசந்த் ஷான்பாக் |
| | | | | | பாஷ்யகாரர், தேசிகன் ஆஸ்தானம் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18.04.18 | 5 | திருதீயை | புதன் | கிருத்திகை | வசந்த உத்சவம் (3) பெருமாள், தாயார், பாஷ்யகாரர், தேசிகன் உத்சவர் திருமஞ்சனம் | ஸ்ரீ.R.சந்திரசேகரன் |
| | | | | | காலை பாஷ்யகாரர் 7 ஆம் நாள் உத்சவம் புறப்பாடு, மாலை பொழுதுடன் ஆராதனம் | Smt.ஹேமலதா ரமாமணி |
| | | | | | பெருமாள், தேசிகன் அலோர்மேல்மங்கா புரம் எழுந்தருளல் | |
| 19.04.18 | 6 | சதுர்த்தி | வியாழன் | ரோஹிணீ | காலை பாஷ்யகாரர் உத்சவம் 8 ஆம் நாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ.R.முகுந்தன் |
| 20.04.18 | 7 | பஞ்சமி | வெள்ளி | மிருகசிரீஷம் | காலை பாஷ்யகாரர் உத்சவம் 9 ஆம் நாள் வீதிபுறப்பாடு , பெருமாள், | ஸ்ரீ.T.C.ரங்கராஜன் - ஸ்ரீநாத் |
| | | | | | தாயார் , மூலவர், தாயார் உத்சவர் திருமஞ்சனம் தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ மாடபூசி சுதர்சனம் ஐயங்கார் பண்டு |
| 21.04.18 | 8 | ஷஷ்டி | சனி | திருவாதிரை | ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம் காலை மங்களாசாசனம் வீதிபுறப்பாடு | ஸ்ரீ.S.சுந்தரம் |
| | | | | | பெருமாள், பாஷ்யகாரர் திருமஞ் சனம் மாலை புறப்பாடு ஆஸ்தானம் சாற்றுமுறை | A.S.V.சாரிடீஸ் |
| 22.04.18 | 9 | சப்தமி | ஞாயிறு | புனர்வஸு | இராமர் திருமஞ்சனம், ஆஸ்தானம் | V.D.R. பண்டு |
| 23.04.18 | 10 | அஷ்டமி | திங்கள் | புஷ்யம் | திருமால்வடை | |
| 24.04.18 | 11 | நவமி / தசமி | செவ்வாய் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 25.04.18 | 12 | தசமி / ஏகாதசி | புதன் | மகம் | திருமழிசையாழ்வார் | |
| 26.04.18 | 13 | ஏகாதசி / த்வாதசி | வியாழன் | பூரம் | பெருமாள் உத்சவர் திருமஞ்சனம், புறப்பாடு | ஸ்ரீ.K.S.கோவிந்தபிரசாத் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27.04.18 | 14 | த்ரயோதசி | வெள்ளி | உத்திரம் | பெருமாள் மூலவர்,தாயார் மூலவர்-உத்சவர் திருமஞ்சனம், தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ மாடபூசி சுதர்சனம் ஐயங்கார் பண்டு |
| 28.04.18 | 15 | சதுர்த்தசி | சனி | ஹஸ்தம் | திருஅவதார உத்சவம் பெருமாள், தாயார் மூலவர் – உத்சவர் திருமஞ்சனம் | S.V.D.D கைங்கர்யபரர்கள் |
| | | | | | மாலை ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி நரசிம்மர் மூலவர் – உத்சவர் திருமஞ் சனம்,ஆஸ்தானம், | ஸ்ரீ.கொடவாசல்ஸி. கிருஷ்ணன்– ஜெயகுமார் |
| | | | | | சாற்றுமுறை மாலைபொழுதுடன் ஆராதனம் பெருமாள் மங்களகிரி வீதிபுறப்பாடு | ஸ்ரீ.L.V.நரசிம்மன் |
| 29.04.18 | 16 | பௌர்ணமி | ஞாயிறு | சித்திரை | சித்ராபௌர்ணமி பெருமாள் மாம்பலம் எழுந்தருளல் மதுரகவிகள் திருநக்ஷத்ரம் | சித்ராபௌர்ணமி கமிட்டி |
| | | | | | இரவு திரும்புகால் ஆனவுடன் சேவாகாலம், சாற்றுமுறை | சித்ராபௌர்ணமி கமிட்டி |
| 30.04.18 | 17 | ப்ரதமை | திங்கள் | சுவாதி | லக்ஷ்மீ நரசிம்மர் மூலவர்-உத்சவர் திருமஞ்சனம் ஆஸ்தானம் | |
| 01.05.18 | 18 | த்வ்தீயை | செவ்வாய் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 02.05.18 | 19 | திருதீயை | புதன் | அநுஷம் | நாதமுனிகள் | |
| 03.05.18 | 20 | சதுர்த்தி | வியாழன் | கேட்டை | தொண்டரடிபொடிகள் | |
| 04.05.18 | 21 | பஞ்சமி | வெள்ளி | மூலம் | பெருமாள் மூலவர், தாயார் மூலவர்-உத்சவர் திருமஞ்சனம், தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ மாடபூசி சுதர்சனம் ஐயங்கார் பண்டு |
| 05.05.18 | 22 | ஷஷ்டி | சனி | பூராடம் | தோட்ட உத்சவம் பெருமாள் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆஷ்ரமம் எழுந்தருளல் | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோசியேஷன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 06.05.18 | 23 | அதிதி | ஞாயிறு | உத்ராடம் | விளம்பி வருஷ வைகாசி ப்ரமோஹ்த்சவ பந்தக்கால் முஹுர்த்தம் | |
| | | | | | காலை 7.00 7.30 ரிஷப லக்னம் | |
| 07.05.18 | 24 | சப்தமி | திங்கள் | ச்ரவணம் | திருமால்வடை | |
| 08.05.18 | 25 | அஷ்டமி | செவ்வாய் | ச்ரவணம் 0.31 | பெருமாள், தேசிகன், அலற்மேல்மங்கா புரம் எழுந்தருளல் | ஸ்ரீ.N.s.ஸ்ரீநிவாசன் |
| 09.05.18 | 26 | நவமி | புதன் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 10.05.18 | 27 | தசமி | வியாழன் | சதயம் | ஸ்ரீ பேயாழ்வார் திருமஞ்சனம் புறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோசியேஷன் |
| 11.05.18 | 28 | ஏகாதசி | வெள்ளி | பூரட்டாதி | கடைவெள்ளி தாயார் திருமஞ்சனம் உள்புறப்பாடு | ஸ்ரீ.K.S.சேதுராமன் குடும்பத்தினர் |
| 12.05.18 | 29 | த்வாதசி | சனி | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 13.05.18 | 30 | த்ரயோதசி | ஞாயிறு | ரேவதி | திருமால்வடை | |
| 14.05.18 | 31 | சதுர்த்தசி | திங்கள் | அஸ்வினி | ஸ்ரீ செல்வர் உத்சவம் | ஸ்ரீ.D.N.S. குடும்பத்தினர் |

## வைணவ வழக்கு - ஒரு 10 சொல் பழகுவோம்

| | | |
|---|---|---|
| அடியேன் / தாஸன் | = | மற்றவர் பயனுக்காக இருப்பவன் |
| எம்பெருமான் | = | பெருமாள் |
| ஸந்நிதி | = | கோயில்/ உறைவிடம் |
| த்வஜ ஸ்தம்பம் | = | கொடி மரம் |
| ஸேவித்தல் | = | வணங்குவது/ ஓதுவது |
| திருக்காப்பு நீக்குதல் | = | திறப்பது |
| திருக்காப்பு சேர்த்தல் | = | மூடுவது |
| ஸ்ரீ ஶடாரி | = | பெருமாள்/ தாயாரின் திருவடி நிலை |
| திருத்துழாய் | = | துளஸி |
| சாத்துப்படி | = | அலங்காரம் |

## அறிவோமா

‘வேங்கடேஶன்’ – இது நம் பெருமானின் திரு நாமம். இதிலுள்ள ‘வேங்கடம்’ எனும் சொல், வடமொழியா / தென்மொழியா ? எனில், இரண்டும் தான். எப்படி ?

வடமொழியில், ‘வேம் + கடதி’ என்பதற்கு, முறையே வினை தீர்ப்பவன் எனப்பொருள்;

தென்மொழியில், ‘கடம் = கஷ்டங்களை, வேம் = விலக்குபவர்’ எனப்பொருள் கொடுக்கும்.

ஸ்ரீ:

# பங்குனி திருக்கல்யாணம்

பார் ஒன்றச்சொன்ன பழமொழி ஒன்று உண்டு - ‘பங்குனி மாதம் பத்தாம் தேதி பருப்பு கல்யாணம்’ என்று. இத்தினத்தன்று அனைத்து ஆலயங்களிலும் திருக்கல்யாண உத்ஸவம் நடத்துவது, ஆகமப்படியான வழிமுறை. வைணவ திருத்தலங்களிலும் அன்று, எம்பெருமானுக்கும்-பிராட்டிக்கும் திருக்கல்யாண வைபவம் நடைபெறும். இதற்குப் ப்ரமாணங்களும் உண்டு.

இராமனின் வீரத்தை நேரில் கண்ட ஜநகமஹாராஜன், அவருக்கு ஸீதாதேவியை மணம் செய்துகொடுக்க எண்ணி, ப்ரஹ்மரிஷி விஶ்வாமித்ரரின் ஆசியை வேண்டுகிறார்; அவரும் ‘ப2ல்கு3ந்யாம் உத்தரே ராஜந் தஸ்மிந் வைவாஹிகம் குரு’ ங்உத்தர-பல்குனியில் விவாஹத்தை நடத்தும்சி என்கிறார். மகிழ்ந்த ஜநகர், ‘உத்தரே தி3வஸே ப்3ரஹ்மந்!ப2ல்கு3நீப்4யாம் மநீஷிண: | வைவாஹிகம் பரஶம்ஸந்தி ப4கோ3 யத்ர ப்ரஜாபதி:’ ங்ப4க3னை தேவதையாகக் கொண்ட உத்தரபல்குநீ நக்ஷத்ரத்தில் விவாகம் செய்வது மனிதர்களுக்கு சிறப்பைத் தரும், என சான்றோர் கூறுவர்சி எனமறுமொழிகிறார். ஸீதா-ராம கல்யாணம் இனிதே நடந்தேறியது.

திருவரங்கம் பெரியகோயிலில் இன்று ஒரு நாள்தான் பெரியபிராட்டியாரோடு நம்பெருமாள்திருக்கல்யாணம்; சேர்த்தி ஸேவை. ஸம்ப்ரதாயப்படியும்இன்று ஒரு விஶேஷம் உண்டு. இத்திருவோலக்கத்தில்தான், ஸ்ரீபாஷ்யகாரர் திவ்யதம்பதிகள் திருவடிகளில், தனக்காகவும்-தன்னைச் சார்ந்தவர்களுக்காகவும் ஶரணாகதி அநுஷ்டித்ததாக வழக்கு. கத்யத்ரயம் அவதாரமும் இன்றுதான்.

நம் திருக்கோயிலிலும், அன்று ஸ்ரீநிவாஸப் பெருமானுக்கும் - பத்மாவதி தாயாருக்கும்திருக்கல்யாணமஹோத்ஸவம்விமர்சையாககொண்டாடப்பட்டது. காலையில் திருமஞ்ஜநம்; மாலை பெருமாள் வீதிப் புறப்பாடு; அடுத்து கோவிலுக்குள் மாலைமாற்றுதல்; பத்தி-உலா; பிறகு திருக்கல்யாணம். தொடர்ந்து ஏகாந்த ஸேவை; மறுநாள் சேர்த்தி-அறை ஸேவை; ஆண்டாளுடன் ஊர்கோல வீதி-புறப்பாடு. இந்த எல்லா வைபவங்களையும்ஸேவித்து பக்தகோடிகள் க்ருதார்த்தரானார்கள்.





ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்கீரிவர் வித்யா அபிவிர்த்தி சங்கல்ப அர்ச்சனை.

ஸ்ரீ:



ஸ்ரீ அலர்மேல் மங்கா ஸமேத
ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள்



பங்குனி ஸ்ரவணம்
- தேசிக வித்யாபவனம்









"ஸ்ரீ அத்திகிரி மஹாத்ம்யம்" உபன்யாசம் by
ஸெந்தர்யபுரம் ஸ்ரீ உ.வே. விஜயராகவாச்சார்ய ஸ்வாமி
(ஆராதகர், ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்)



அத்யாபாக கோஷ்டி



வேத பாராயண கோஷ்டி



ராமர் பட்டாபிஷேகம்



பெருமாள், தேசிகர், கண்டையுடன் ச்ரவண புறப்பாடு





ஸ்ரீ:











ஸ்ரீ பேயாழ்வார்



ஸ்ரீ ஸ்வாமி தேசிகன்